1993 ஏப்ரல் 15]

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்படி அது பற்றி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 357. டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

357—

ஏரிக்கால்வாய்கள் வழியாக நிலத்தடி குழாய்கள் அமைத்தல்.

*14715—டாக்டர் பெ. வீரபாண்டியன்:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாய நீர்ப் பாசன வசதிக்காக ஏரிக்கால்வாய்க வழியாக நிலத்தடி குழாய்கள் அமைக்க அரசிடம் கருத்துரு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விவசாய நீர்ப்பாசனத்திற்காக ஏரிக்கால்வாய்கள் மூலம் நிலத்தடி குழாய்கள் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் நன்மை அடைய வேண்டும், விளைச்சலைப் பெருக்க வேண்டும் என்ற காரணத்திற்காகத்தான் இந்தக் கள்வியை நான் தொடுத்தேன். நீர்ப் பாசன வசதிக்காக ஏரிக்கால்வாய் வழியாக நிலத்தடி குழாய் அமைத்தால் தொலைவில் ஏரி இருப்பின் அல்லது மிக அதிக தூரத்தில் நிலங்கள் இருப்பின் இந்தக் குழாய் மூலமாகத் தண்ணீர் பெற்று விவசாயிகள் நன்மை அடைய வாய்ப்பு உண்டு. ஆகவே இதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏரிக்கால்வாய்களில் பிரதான கால்வாய்கள் பொதுப் பணித் துறையின் மூலமாக அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. வேளாண்மைப்